**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : C.C. 83/2022**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 29.01.2024**

| | |
|---|---|
| **Name : முத்துராஜ்** | **Caste : MBC** |
| **Father's Name : அம்மாசி** | **Calling : Agriculture** |
| **Village : பெரும்பள்ளம்** | **Religion : Hindu** |
| **Taluk : மேட்டூர்** | **Age : 54** |

**(Accused absent. Filed 317 and allowed. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் பெரும்பள்ளத்தில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்தவர் என்னுடைய அம்மா லட்சுமி. 19.01.2022 ம் தேதி மதியம் 2.00 மணியளவில் நானும், என்னுடைய மகன் சண்முகவேலும் எங்கள் வீட்டிற்கு முன்புறம் ரோட்டில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். என்னுடைய அம்மா பால் கறப்பதற்காக ரோட்டின் மேற்கிலிருந்த கிழக்குப்பக்கம் செல்லும் சாலையில் சென்றபோது பவானியிலிருந்து மேட்டூர் நோக்கி அதிவேகமாக இனோவா காரை ஓட்டிவந்த எதிரி எனது அம்மாவின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார். விபத்தில் அம்மாவுக்கு இரண்டு கால்களும் உடைந்துவிட்டது. கார் அடித்த வேகத்தில்எனது அம்மா மேலே தூக்கி எறியப்பட்டு காரின் பேனெட்டின் மீது விழுந்ததில் நெற்றியிலும் பலத்த அடிப்பட்டிருந்தது. இந்த விபத்தை ஏற்படுத்திய எதிரியை என்னால் பார்த்தால் அடையாளம் சொல்லமுடியும். இன்று நீதிமன்றத்தில் எதிரி ஆஜரில்லை. அடிப்பட்ட எனது அம்மாவை ஆம்புலன்ஸ் மூலம் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மருத்துவர் பரிசோதித்துவிட்டு எனது அம்மா இறந்து விட்டதாக என்னிடம் சொன்னார்.

இதுசம்மந்தமாக மேட்டூர் காவல் நிலையத்தில் எழுத்து மூலமான புகார் ஒன்றினை கொடுத்தேன். புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். (புகார் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ) போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**செய்யப்படவில்லை.

விசாரணை முடிக்கப்பட்டது.

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : C.C. 83/2022**

**Prosecution witness : அ.சா.2** **Date : 29.01.2024**

| | |
|---|---|
| **Name : அருண்** | **Caste : வன்னியர்** |
| **Father's Name : துரைராஜ்** | **Calling : விவசாயம்** |
| **Village : கூராண்டிபுதூர்** | **Religion : இந்து** |
| **Taluk : மேட்டுர்** | **Age : 3** |

**(Accused absent. Filed 317 and allowed. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் பெரும்பள்ளத்தில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன லட்சுமி என்னுடைய பாட்டி ஆவார். 19.01.2022 ம் தேதி மதியம் 2 மணியளவில் சம்பவயிடத்திற்கு அருகிலுள்ள என்னுடைய தோட்டத்தில் விவசாய வேலை செய்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது என்னுடைய பாட்டி லட்சுமி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி பிரபாகரன் வீட்டிற்கு வருவதற்காக வந்தபோது பவானி பக்கம் இருந்து மேட்டுர் நோக்கி இனோவா காரை ஓட்டிவந்த எதிரி பாட்டியின் மீது மோதியதில் பாட்டி தூக்கி வீசப்பட்டார். அதில் பம்பரில் அடிப்பட்டதில் இரண்டு கால்களும் உடைந்துவிட்டது. ஆம்புலன்ஸ்ற்கு போன் செய்து மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். எதிரியை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். இன்று நீதிமன்றத்தில் எதிரி ஆஜரில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**–செய்யப்படவில்லை.

விசாரணை முடிக்கப்பட்டது.

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டுர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : C.C. 83/2022**

**Prosecution witness : அ.சா.3** **Date : 29.01.2024**

| | |
|---|---|
| **Name : பூபதி** | **Caste : வன்னியர்** |
| **Father's Name : கிருஷ்ணமூர்த்தி** | **Calling : கூலி** |
| **Village : கூராண்டிபுதூர்** | **Religion : இந்து** |
| **Taluk : மேட்டூர்** | **Age : 39** |

**(Accused absent. Filed 317 and allowed. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் பெரும்பள்ளத்தில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். 19.01.2022 ம் தேதி மதியம் 1.30 மணியிலிருந்து 2 மணியளவில் பிரபாகரன் என்பவர் தோட்டத்தில் வேலை செய்துக்கொண்டிருந்தேன். விபத்தில் இறந்துபோன லட்சுமி மாட்டை பிடிப்பதற்காக மேற்கிலிருந்து கிழக்குநோக்கி பிரபாகரன் வீட்டிற்கு வருவதற்காக வந்தபோது பவானியிலிருந்து மேட்டூர் நோக்கி வேகமாக காரை ஓட்டிவந்த எதிரி பாட்டி லட்சுமியின் மீது மோதிவிபத்தை ஏற்படுத்தினார். விபத்தில் பாட்டி லட்சுமிக்கு இரண்டு கால்களும் உடைந்தும், தலையில் பலத்த அடிப்பட்டும் இறந்துவிட்டார். விபத்தை ஏற்படுத்திய எதிரியை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**–செய்யப்படவில்லை.

விசாரணை முடிக்கப்பட்டது.

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.I, Mettur**
**Case No : C.C. 83/2022**

**Prosecution witness : அ.சா.4** **Date : 29.01.2024**

| | |
|---|---|
| **Name : அம்மாசி** | **Caste : வன்னியர்** |
| **Father's Name : சீரங்ககவுண்டர்** | **Calling : விவசாயம்** |
| **Village : பெரும்பள்ளம்** | **Religion : இந்து** |
| **Taluk : மேட்டூர்** | **Age : 65** |

**(Accused absent. Filed 317 and allowed. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் பெரும்பள்ளத்தில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன லட்சுமி என்னுடைய மனைவி. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு எனது மனைவி லட்சுமியின் மீது கார் மோதியதில் இறந்து விட்டதாகவும், எனது மனைவியை மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றிருப்பதாகவும் எனக்கு தகவல் சொன்னார்கள். தகவல் தெரிந்து நான் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சென்று எனது மனைவியின் பிரேதத்தை பார்த்தேன். நான் விசாரித்தபோது எனது மனைவி மாட்டை பிடிப்பதற்காக மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி பிரபாகரன் என்பவர் வீட்டிற்கு அருகில் மாட்டை பிடிப்பதற்காக சென்றபோது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி காரை வேகமாக ஓட்டிவந்த நபர் எனது மனைவியின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக தெரிந்துக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**–செய்யப்படவில்லை.

விசாரணை முடிக்கப்பட்டது.

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : C.C. 83/2022**

**Prosecution witness : அ.சா.5** **Date : 29.01.2024**

| | |
|---|---|
| **Name : கொழந்தான்** | **Caste : SC** |
| **Father's Name : மொட்டையன்** | **Calling : Cooly** |
| **Village : பெரும்பள்ளம்** | **Religion : Hindu** |
| **Taluk : மேட்டூர்** | **Age : 60** |

**(Accused absent. Filed 317 and allowed. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் பெரும்பள்ளத்தில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு லட்சுமியின் மீது கார் மோதியதில் இறந்து விட்டதாகவும், மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றிருப்பதாகவும் தெரிந்துக்கொண்டேன். இந்து வழக்கு சம்மந்தமாக போலீசார் அங்கிருந்த என்னிடமும், அப்புசாமி என்பவரிடமும் வழக்கின் விவரத்தைகூறி எங்கள் இருவர் முன்னிலையில் விபத்து நடந்த இடத்தை படம் வரைந்து அங்கிருந்த இருந்தவர்களின் வீடுகள் மற்றும் இடத்தை எழுதி எங்கள் இருவரிடமும் படித்துக்காண்பித்து கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். **(பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**செய்யப்படவில்லை.

விசாரணை முடிக்கப்பட்டது.

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**